**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 70/2020 |
| Name | : Kumarashanmugam |
| P.W. | : 8 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**02.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பொள்ளாச்சி கிழக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 25.01.2019 ம் தேதி நான் மடத்துக்குளம் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது மடத்துக்குளம் காவல் நிலைய குற்ற எண். 23/2019 இதச பிரிவுகள் 279, 337 ன் படி பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை மற்றும் வழக்குக் கோப்பை பெற்று நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 25.01.2019 ம் தேதி காலை 10.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நிஜாம்தீன் மற்றும் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் சாட்சிகள் 1 முதல் 3 வரையான சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயம்பட்ட சத்தியவாணி 28.01.2019 ம் தேதி அதிகாலை 03.30 மணிக்கு கோவை அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவுகள் 279, 337 ல் இருந்து இதச பிரிவுகள் 279, 304(A) ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து அறிக்கை தாக்கல் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல்**

**அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் இறந்து போனவரின் பிரேதத்தின் மீது 28.01.2019 ம் தேதி சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்குக் கோப்பை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) செங்கல் சூளையும், ஹாலோ பிளாக் செய்யும் இடமும் வேறு, வேறு தொழிற்சாலை என்றால் சரிதான். புகாரில் VKM ஹாலோ பிளாக் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது விசாரணையில் செங்கல் சூளை அருகே நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வரைபடத்தில் VKM ஹாலோ பிளாக் தொழிற்சாலை இருப்பதாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். தென்வடல் சாலையில் கிழபுற எல்லையிலிருந்து 15 அடி உள்ளே தள்ளி விபத்து நடந்ததாக மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வரைபடத்தில் சாலையின் மொத்த அகலம் 20 அடி தான் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சாலையில் மத்திய பகுதி எல்லையிலிருந்து 10 அடி இருக்கும் என்றால் சரிதான். சாலையின் மத்திக்கு 5 அடி மேல்புறம் தள்ளி தான் விபத்து நடந்திருக்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான். வரைபடத்தில் சம்பவ இடம் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(2) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் போக்குவரத்து அதிகம் நிறைந்த சாலை என்றால் சரிதான். காயம்பட்டவர்கள் மருத்துவமனைக்கு செல்வதற்கு முன் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தார்களா என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும், வடபுறம் சோழமாதேவி மேடு என்ற இடத்திற்கும் சுமார் ½ கி.மீ இடைவெளி இருக்கும். வழக்கு சம்மந்தமாக விபத்து பதிவேடு பதிவுகளை பார்த்தேனா என்றால் இல்லை. நான் சென்று பார்த்த போது சாலை ஓரத்தில் ஒரு TATA ACE வாகனம் விழுந்து கிடந்தது என்றால் சரிதான். அந்த வாகனம் பற்றி விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன். அந்த வாகனத்தை ஓட்டி வந்தவர் விபத்தை பார்த்து எதிரியை நிற்கச் சொல்லும் போது நிலை தடுமாறி கவிழ்ந்துவிட்டது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் சோழமாதேவி மேடு இல்லை என்றால் சரியல்ல. முன்னால்

வாகனத்தில் செல்பவர் பின்னால் வரும் வாகனத்தை பொதுவாக கணிக்க இயலாது என்றால் சரிதான்.

(3) சாட்சி கவியரசனை சம்பவ இடத்தில் வைத்து 25.01.2019 ம் தேதி சுமார் 10.30 மணியளவில் விசாரித்தேன். கவியரசன் அவரது அம்மா பேச முடியாமல் மருத்துவமனையில் இருந்த போது உடன் இருந்ததாக சொல்லியுள்ள நிலையில் நான் அவரை சம்பவ இடத்தில் விசாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 24 ம் தேதி அவர் மருத்துவமனைக்கு சென்றுவிட்டு 25 ம் தேதி அவர் சம்பவ இடம் வந்தார். புகாரில் அவரது அம்மாவிற்கு பேச முடியாமல் அவர் உடன் இருந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

(4) சாட்சி பிரபாகரன் என்னுடைய விசாரணையில் சத்தம் கேட்டு சென்று பார்த்ததாக சொல்லியுள்ளார் என்றும், விபத்தை நேரடியாக பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சியிடம் சாட்சி பிரபாகரன் போலீஸில் கொடுத்த வாக்குமூலம் காண்பிக்கப்பட்டு கேள்வி கேட்கப்பட்டது – விபத்து ஏற்படுத்திய வாகனம் ஸ்ரீராம ஜெயம் என்று எழுதப்பட்ட TATA ACE வண்டி தான் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனது விசாரணையில் ஸ்ரீராம ஜெயம் என்று எழுதப்பட்ட TATA ACE வண்டி எந்த வண்டி என்று தெரிய வரவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் இருந்து ஒரு நாள் கழித்து நான் சம்பவ இடம் செல்லும் வரை விபத்து ஏற்படுத்திய வாகனம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது விசாரணையில் சம்பவம் நடந்த பிறகு அந்த இடத்திற்கு பிரபாகரன் வந்தார் என்றால் சரிதான்.

(5) மதியழகன் என்பவர் அவரது அம்மாவை இருசக்கர வாகனத்தில் வேலைக்கு அழைத்துச் செல்லும் போது விபத்து ஏற்பட்டதாக எனது விசாரணையில் தெரிய வரவில்லை என்றால் சரிதான். புகாரில் ஹாலோ பிளாக் என்றும், விசாரணையில் செங்கல் சூளை என்று மாற்றி சொல்லியுள்ளது பற்றி விசாரணை செய்யவில்லை. பார்வை மகஜர் சாட்சி காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரியல்ல சம்பவ இடத்தில் தான் போட்டார். நான் சம்பவ இடம் செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து வரைபடம் தயார் செய்து காயம்பட்ட நபரின் உறவினரிடம் கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு பெற வேண்டும் என்று பொய்யாக கொடுக்கப்பட்ட புகார்

என்றால் சரியல்ல. கவியரசன் வாகனத்திற்கு காப்பீடு சான்று, ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்று நான் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. கவியரசன், பிரபாகரன், ராஜா ஆகியோரை நான் சம்பவ இடத்தில் வைத்து விசாரிக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக வாக்குமூலம் தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் விசாரணை செய்த வரை முறையாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.02 17:48:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்